// பாதுகாப்பான முறையில் //

# இராமநாதபுரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

<u>ப.மு.எண்.1255/அ1 / 2025, நாள். .04.2025</u>

---------

பொருள் – பள்ளிக் கல்வி – அமைச்சுப் பணி – இராமநாதபுரம் மாவட்டம் – மாவட்டக் கல்வி அலுவலகம் (தொடக்கக் கல்வி), பரமக்குடி – இளநிலை உதவியாளர் திரு.வெ.சா.நல்ல முகம்மது என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 29.09.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை –
1) அரசாணை (நிலை) எண்.151, பள்ளிக் கல்வி (SE1(1)) துறை, நாள்.09.09.2022.
2) அரசுக் கடித எண்.(e file) எண்.4419, தொ.க.1(1) 2021–1, பள்ளிக் கல்வித் துறை, நாள்.17.05.2024.
3) சென்னை–06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (ப.தொ) செயல்முறைகள் ந.க.எண்.026062/ஜே/இ2/2023, நாள்.22.05.2024.
4) இராமநாதபுரம் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.09266/அ1/2023, நாள்.27.09.2023.
5) சென்னை–06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (ப.தொ) செயல்முறைகள் ந.க.எண்.658/அ4/இ1/2023, நாள்.04.01.2024.
6) பரமக்குடி மாவட்டக் கல்வி அலுவலரின் (தொடக்கக் கல்வி) கடித ந.க.எண்.185/அ1/ 2025, நாள்.30.01.2025 மற்றும் 21.03.2025.

+++++++

இராமநாதபுரம் மாவட்டம் சோழகன்பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 29.09.2023 முற்பகல் முதல் பணியேற்று பார்வை 5–ன்படி இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி மாவட்டக் கல்வி அலுவலகத்திற்கு (தொடக்கக் கல்வி) விருப்ப மாறுதல் பெற்று 22.01.2024 மு.ப முதல் மாறுதல் பெற்ற அலுவலகத்தில் பணிபுரிந்துவரும் திரு.வெ.சா.நல்ல முகம்மது என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கக் கோரும் கருத்துரு பார்வை 6–ல் காணும் கடிதம் வாயிலாக சம்மந்தப்பட்ட அலுவலரது பரிந்துரையுடன் இவ்வலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது.

மேற்காணும் பணியாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் (Group-IV Services (Notification No.07/2022, dated 30.03.2022) தேர்வு செய்யப்பட்டு பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதன் அடிப்படையில் பார்வை 4–ல் காணும் செயல்முறைகளின்படி பணிநியமனம் வழங்கப்பட்டு 29.09.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார். அன்னாரது கல்விச் சான்றுகளின் உண்மைத்தன்மை சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலரால் அறியப்பட்டுள்ளது. எனவே பார்வை 6–ல் காணும் சார்ந்த அலுவலரின் பரிந்துரையின் அடிப்படையில் திரு.வெ.சா.நல்ல முகம்மது என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் முதன்முதலில் பணியேற்ற நாளான 29.09.2023 முற்பகல் முதல் பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

1. இப்பணியாளர் பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவார். இவர் தகுதிகாண் பருவ காலத்தில் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினையும், தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்வினையும் கண்டிப்பாகத் தேர்ச்சி பெற வேண்டும்.
2. இப்பணியாளரது நியமனம் தொடர்பாக நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள / தொடரப்படும் வழக்குகளின் தீர்ப்பாணைக்கு உட்பட்டு இவ்வாணை வழங்கப்படுகிறது.